தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையரின் செயல்முறைகள் சென்னை-6

ந.க.எண்.00701 / சி3 / இ1 / 2022 நாள்.06 .04.2022

பொருள்: பள்ளிக் கல்வி - 2021-22ம் ஆண்டு ஆசிரியர்கள் பொதுமாறுதல் கலந்தாய்வு - மனமொத்த மாறுதல் / அலகுவிட்டு அலகு மாறுதல் விண்ணப்பங்கள் கல்வி தகவல் மேலாண்மை முறைமை (EMIS) இணையதளத்தில் பதிவேற்றம் செய்தல் - அறிவுரைகள் வழங்குதல் - சார்பு.

பார்வை:
1)அரசாணை (நிலை)எண்.176 பள்ளிக் கல்வி (பக5(1) துறை நாள்.17.12.2021
2)அரசாணை (நிலை) எண்.12 பள்ளிக் கல்வி (பக5(1) துறை நாள்.3.2.2022
3)அரசாணை (நிலை)எண்.15 பள்ளிக் கல்வி (பக5(1) துறை நாள்.10.2.2022
4)பள்ளிக் கல்வி ஆணையரின் செயல்முறைகள் ந.க.எண். 25154 / அ1 / இ2 / 2021 நாள்.20.01.2022 மற்றும் பல

-0-

பார்வை-1ல் காணும் அரசாணையின்படி 2021-22ம் கல்வியாண்டிற்கு அரசுப் பள்ளிகளில் பணிபுரியும் அனைத்துவகை ஆசிரியர்களுக்கான பொது மாறுதல் கலந்தாய்வு நெறிமுறைகள் சார்பாக ஆணை வெளியிடப்பட்டு அனைத்துவகை ஆசிரியர்கள் மாவட்டத்திற்குள் மற்றும் மாவட்டம் விட்டு மாவட்டம் மாறுதல் கலந்தாய்வு நடைபெற்று முடிந்துள்ளது.

இதன் தொடர்ச்சியாக மாவட்டத்திற்குள் மற்றும் மாவட்டம் விட்டு மாவட்டம் மனமொத்த மாறுதல் கோரும் (Mutual Transfer) ஆசிரியர்களுக்கான கலந்தாய்வும், அலகு விட்டு அலகு மாறுதல் (Unit Transfer) மூலம் பள்ளிக் கல்வித் துறைக்கு மாறுதல் கோருபவர்களுக்கான கலந்தாய்வும் கல்வி தகவல் மேலாண்மை முறைமை EMIS இணையதள வழியாக மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

தபிபா

இவ்வகையில் கீழ்க்காணும் அறிவுரைகளை பின்பற்றி மனமொத்த மாறுதல் கோரும் ஆசிரியர்களை விண்ணப்பங்களை EMIS இணையதளத்தில் பதிவேற்றம் செய்யும்படி அனைத்து தலைமை ஆசிரியர்களுக்கும் அறிவுறுத்துமாறு அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**<u>மனமொத்த மாறுதல் கோரும் விண்ணப்பங்கள் பதிவேற்றம் – அறிவுரைகள்</u>**

1) பார்வை–1ல் காணும் அரசாணை பத்தி 6ல் கண்டுள்ளபடி

(a) மனமொத்த மாறுதல் கோரும் ஆசிரியர் ஓய்வு பெறுவதற்கு முன் குறைந்தபட்சம் இரு கல்வி ஆண்டுகள் பணிக்காலம் உள்ளவர்களே தகுதியானவர்கள். (Example–2022–23 மற்றும் 2023–24 கல்வியாண்டுகளில் ஓய்வு பெறுபவர்களாக இருத்தல் கூடாது)

(b) ஏற்கனவே மனமொத்த மாறுதல் ஆணை பெற்றவர்கள் தற்போது பணிபுரியும் பள்ளியில் குறைந்தபட்சம் இரு ஆண்டுகள் பணிபுரிந்து இருத்தல் அவசியம்.

2) மனமொத்த மாறுதல் கோரி விண்ணப்பிக்கும் ஆசிரியர்கள் பார்வை–1 மற்றும் 3ல் கண்டுள்ள அரசாணைகளின்படி 31.12.2021ல் உள்ளவாறு தற்போதைய பணியிடத்தில் ஓராண்டு பணிமுடித்திருக்கவேண்டும்.

3) இரண்டிற்கும் மேற்பட்டவர்கள் (எ.கா. மூவர்–triangular A–B–C, A–C–B etc.,) மனமொத்த மாறுதல் கோரும் விண்ணப்பங்களை ஏற்ககூடாது.

4) வெவ்வேறு துறை/அலகுகளுக்கு (Department & Unit) மனமொத்த மாறுதல் கோரும் விண்ணப்பங்களை ஏற்ககூடாது.

5) ஆண் ஆசிரியர்கள் பெண்கள் மட்டும் பயிலும் (Girls High & Hr.Sec.) பள்ளிகளுக்கு மனமொத்த மாறுதல் கோரும் விண்ணப்பங்களை பரிசீலிக்ககூடாது. இருபாலர் பயிலும் மாணவர்கள் மற்றும் ஆண்கள் பயிலும் பள்ளிகளுக்கு மட்டும் அனுமதிக்கப்படுவர்.

6) மனமொத்த மாறுதல் கோரும் விண்ணப்பங்களை கல்வி தகவல் மேலாண்மை முறைமையில் (EMIS) புதிதாக வடிவமைக்கப்பட்டுள்ள விண்ணப்ப படிவத்தில் சம்மந்தப்பட்ட ஆசிரியர்களே பதிவேற்றம் செய்தல், தலைமை ஆசிரியர் / முதன்மைக் கல்வி அலுவலர் ஏற்பளித்தல் (Approval) குறித்தான வழிகாட்டு நெறிமுறைகள் ஓரிரு தினங்களில் தெரிவிக்கப்படும்.

தபிபா

**அலகு விட்டு அலகு மாறுதல் கோரும் விண்ணப்பங்கள் பதிவேற்றம்–அறிவுரைகள்**

1) அலகு விட்டு அலகு / துறை மாறுதல் கோரி விண்ணப்பிக்கும் ஆசிரியர்கள் பார்வை–1 மற்றும் 3ல் கண்டுள்ள அரசாணைகளின்படி 31.12.2021ல் உள்ளவாறு தற்போதைய பணியிடத்தில் ஓராண்டு பணிமுடித்திருக்கவேண்டும்.

2) அலகு விட்டு அலகு / துறை மாறுதல் கோரும் விண்ணப்பங்களை கல்வி தகவல் மேலாண்மை முறைமையில் (EMIS) புதிதாக வடிவமைக்கப்பட்டுள்ள விண்ணப்ப படிவத்தில் சம்மந்தப்பட்ட ஆசிரியர்களே பதிவேற்றம் செய்தல் சார்பாக வழிகாட்டு நெறிமுறைகள் ஒரிரு தினங்களில் தெரிவிக்கப்படும்.

3) பார்வை–1ல் காணும் அரசாணை பத்தி எண்.7ல் தெரிவித்துள்ள நிபந்தனைகளின்படி விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படவேண்டும். இவ்வகையில்

(a) பிறதுறை / உள்ளாட்சி அமைப்புகள் (Corporation) கீழ் செயல்படும் பள்ளிகளில் பணிபுரியும் உடற்கல்வி / இசை/ ஓவியம் / தையல் / பட்டதாரி / முதுகலை பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் தொடக்கக் கல்வித்துறையின் கீழ் பணிபுரியும் இடைநிலை ஆசிரியர்கள் / பட்டதாரி ஆசிரியர்கள் அலகு விட்டு அலகு மாறுதல் கோர தகுதியுள்ளவர் ஆவார். (இடைநிலை ஆசிரியர்கள் பள்ளிக் கல்வித் துறைக்கு ஈர்த்துக் கொள்ளப்படமாட்டாகள்)

(b) துறை மாறுதல் / அலகு விட்டு அலகு மாறுதல் கோருபவர்கள் தற்போது தாங்கள் பணிபுரியும் துறைத் தலைவரிடம் துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை / குற்றவியல் நடவடிக்கை / துறை (அ) அரசுக்கு செலுத்த வேண்டிய தொகை ஏதும் இல்லை என்பதற்கான சான்று உள்ளிட்ட தடையின்மைச் சான்று (NOC) பெற்று முன்னிலைப் படுத்தப்படவேண்டும்.

(c) (i)அலகு விட்டு அலகு மாறுதல் மூலம் பள்ளிக் கல்வித் துறைக்கு மாறுதல் கோரும் ஆசிரியர்கள் இக்கல்வியாண்டில் (2021–22) வெளியிடப்பட்டுள்ள முன்னுரிமை ஒன்றியங்களில் (Priority blocks) காலியாகவுள்ள ஆசிரியர் பணியிடங்களை மட்டுமே இணையவழி கலந்தாய்வில் தெரிவு செய்ய வாய்ப்புகள் வழங்கப்படும். (முன்னுரிமை ஒன்றியங்களின் காலிப்பணியிட பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது)

தபிபா

(c) (ii) அலகு விட்டு அலகு மாறுதலில் பள்ளிக் கல்வித் துறைக்கு வரும் ஆசிரியர்கள்மாறுதல் பெறும் அலகில் சார்ந்த வகை/ பணிநிலை (category and service) இவற்றில் பணியில் இளையவராகவே வைக்கப்படுவார். ஒரு அலகில் குறிப்பிட்ட பதவியில் ஏற்பளிக்கப்பட்ட தகுதிகாண் பருவத்தினர் மாறுதல் பெறும் புதிய அலகில் (பள்ளிக் கல்வித் துறை) அதேப் பதவியில் பணிபுரியும் ஏற்பளிக்கப்பட்ட தகுதிகாண் பருவத்தினருக்கு அடுத்து வைக்கப்படுவார்.

(c)(iii) தாய்துறையில் தகுதிகாண் பருவம் நிறைவு செய்தவர்கள் மட்டுமே அலகு மாறுதல் மூலம் பள்ளிக் கல்வித் துறைக்கு மாறுதல் பெற தகுதியுடையவர் ஆவார்கள்.

(c)(iv) மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளை குறிப்பிட்டு உறுதிஆவணம் சார்ந்த ஆசிரியரிடம் பெறப்பட்டு, பள்ளிக் கல்வித்துறைக்கு மாறுதல் பெறும் பட்சத்தில் அன்னாரது பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்படவேண்டும்.

4) பள்ளிக் கல்வித் துறைக்கு அலகு விட்டு அலகு / துறை மாறுதல் கோரி விண்ணப்பம் செய்பவர்களுக்கு அவர்களது தாய் துறையில், தற்போது வகிக்கும் பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளின் அடிப்படையிலேயே (Date of Regularization) மாறுதல் கோரும் முன்னுரிமை பட்டியல் அமையும்.

5) மேற்குறிப்பிட்டவாறு அலகு விட்டு அலகு மாறுதல் கோரும் ஆசிரியர்கள் தங்களது விண்ணப்பங்களை, கல்வி தகவல் மேலாண்மை முறைமை EMIS பதிவுகளின்படி சம்மந்தப்பட்ட ஆசிரியர்களின் அடையாள எண் (ID) பள்ளிக்கான குறியீட்டு எண் (Udise no) ஆகிய விவரங்களுடன் EMIS இணையத்தில் பதிவு செய்ய வேண்டும் எனவும் அவ்வாறு பதிவேற்றம் செய்யப்பட்ட விண்ணப்ப நகலினை பதிவிறக்கம் (Download) செய்து தமது தாய் துறையில் வழங்கப்பட்ட தடையின்மைச் சான்றுடன் (NOC) இணைத்து தொடர்புடைய மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரிடம் கீழ்க்குறிப்பிட்ட காலஅட்டவணைப்படி ஒப்படைக்கப்படவேண்டும் எனவும், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் சார்ந்த ஆசிரியர்களின் EMIS விண்ணப்பங்களையும் தடையின்மை சான்றினையும் சரிபார்த்து EMIS இணையத்தில் தடையின்மை சான்றினை பதிவேற்றம் செய்து ஏற்பளிக்க வேண்டும் (Approval) எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தபிபா

**காலஅட்டவணை**

| வஎண் | பொருள் | நாள் |
|---|---|---|
| 1 | மனமொத்த மாறுதல் / அலகு விட்டு அலகு மாறுதல் விண்ணப்பங்கள் பதிவேற்றம் செய்ய வேண்டிய நாட்கள் | 12.04.2022 முதல் 18.04.2022 வரை |
| 2 | மாறுதலுக்கான முன்னுரிமைப் பட்டியல் வெளியிடுதல் (Seniority List) | 19.04.2022 |
| 3 | மாறுதலுக்கான முன்னுரிமைப் பட்டியலில் திருத்தம் மற்றும் முறையீடுகள் இருப்பின் பதிவேற்றம் செய்யவேண்டிய நாள் | 20.04.2022 & 21.04.2022 |
| 4 | மாறுதல் விண்ணப்பங்களின் இறுதி முன்னுரிமைப் பட்டியல் வெளியிடுதல் (Final Seniority List) | 22.04.2022 |
| 5 | மனமொத்த மாறுதல் உள்மாவட்டம் மற்றும் வெளிமாவட்டம் (All Category Teachers) | 25.04.2022 |
| 6 | அலகு விட்டு அலகு மாறுதல் (Unit Transfer to priority blocks only) | 26.04.2022 |

ஆணையருக்காக

09.04.22.

பெறுநர்

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்

1. இணை இயக்குநர் (மேல்நிலைக் கல்வி)
2. EMIS ஒருங்கிணைப்பாளர், மாநில திட்ட இயக்ககம் சென்னை–6
3. அனைத்து அரசு/நகராட்சி உயர்/மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் (மு.க.அ. மூலமாக)